THE HINDU 17 JAN 2025

# Erode East bypoll: filing of nominations ends today

The Hindu Bureau
ERODE

The filing of nominations for the byelection to the Erode (East) Assembly constituency, which began on January 10, will conclude today.

Following the death of Congress MLA E.V.K.S. Elangovan, the Election Commission had, on January 7, announced that the byelection to the constituency would be held on February 5.

**January 17 deadline**

Although nominations could be filed from January 10 to 17, they were not accepted on January 11 (second Saturday) and January 14, 15 and 16 (government holidays for Pongal). Consequently, nominations were filed on January 10 and 13, with January 17 being the last date.

On the first day, three candidates filed their nominations, while six candidates filed their papers on the second day. On Friday, DMK candidate V.C. Chandhirakumar and Naam Tamilar Katchi candidate M.K. Seethalakshmi would file their nominations.

The scrutiny of nominations would take place on January 18, and the last date for the withdrawal of candidature is January 20. The counting of the votes would be carried out on February 8, and the entire election process would be completed by February 10.

Scanned with OKEN Scanner

THE TIMES OF INDIA 17 JAN 2025

# Over ₹4lakh unaccounted cash seized from two in Erode East

TIMES NEWS NETWORK

**Erode:** More than ₹4 lakh unaccounted cash was seized from two traders on Thursday, taking the sum of money seized by the election flying squads in Erode East assembly segment to ₹12 lakh since the model code of conduct came into force on January 7.

One of the three flying squads were conducting a vehicle check at Kumalankuttai in the early hours of Thursday, when they intercepted a car. The squad members searched the car and found ₹2.2 lakh in cash. The person driving the car identified himself as K Muneer, of Malappuram in Kerala, and said the money was meant for buying cattle from Karungalpalayam livestock market. Since he was not able to produce documents to show the source of the money, the cash was seized and handed over to the treasury.

S Parthiban



**12 LAKH AND COUNTING:** Election flying squads in Erode East assembly segment have seized ₹12 lakh of unaccounted cash since the model code of conduct came into force on January 7

Later in the day, the officials were conducting a vehicle check on Perundurai Road when they found unaccounted cash of ₹2 lakh in a car that was driven by U Hariprakash, of Bhavani.

On Wednesday night too, officials had seized ₹2 lakh from a trader from Kerala, identified as H Rafeeq of Kollam. Like Muneer, he too said the cash was meant for buying cattle.

Election officials said the seized amounts would be handed over to the traders as and when they produce documents to show the source of the money.

Scanned with OKEN Scanner

இந்து தமிழ் 17 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# திமுக – நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் இன்று மனு தாக்கல்

ஈரோடு

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வேட்புமனுத் தாக்கல் இன்று நிறைவடைகிறது. இதுவரை 9 சுயேச்சை வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்துள்ள நிலையில், திமுக மற்றும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் இன்று மனு தாக்கல் செய்யவுள்ளனர்.

ஈரோடு கிழக்கு சட்டப் பேரவைத் தொகுதிக்கு பிப்ரவரி 5-ம் தேதி இடைத்தேர்தல் நடக்கிறது. இத்தேர்தலை, அதிமுக, பாஜக, தேமுதிக, தவெக உள்ளிட்ட கட்சிகள் புறக்கணித்துள்ளன.

ஈரோடு கிழக்கு தொகுதிக்கான வேட்புமனு தாக்கல், ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் அலுவலகத்தில், 10-ம் தேதி தொடங்கியது. தேர்தல் மன்னன் பத்மராஜன், கோவை நூர் முகமது உள்ளிட்ட 3 பேர் முதல் நாளில் மனு தாக்கல் செய்தனர். இதன் தொடர்ச்சியாக 13-ம் தேதி ராஜசேகர், கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட 6 சுயேச்சை வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்தனர். ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிட இதுவரை 9 சுயேச்சை வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்துள்ளனர்.

ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்ய இன்று (17-ம் தேதி) இறுதி நாளாகும். இன்று காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை வேட்புமனுக்கள் பெறப்படவுள்ளன.

இந்நிலையில் திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மா.கி. சீதாலட்சுமி ஆகியோர் இன்று வேட்புமனு தாக்கல் செய்யவுள்ளனர்.

இவர்களோடு சுயேச்சை வேட்பாளர்கள் சிலரும் வேட்புமனு தாக்கல் செய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. இரு பிரதான கட்சி வேட்பாளர்கள் இன்று வேட்புமனு தாக்கல் செய்ய உள்ள நிலையில், பலத்த போலீஸ் பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

DMK and 'Naam Tamilar Katchi' candidates files their nomination today.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 17 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்:

# வேட்புமனு தாக்கல் இன்று நிறைவு

## 88 விண்ணப்பங்களை வாங்கிச்சென்றுள்ளதாக அதிகாரிகள் தகவல்

ஈரோடு, ஜன.17-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவுபெறுகிறது. இது வரை 88 விண்ணப்பங்களை வாங்கிச்சென்றுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

### இன்று நிறைவு

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் கடந்த 7-ந்தேதி அறிவிக்கப்பட்டு 10-ந்தேதி வேட்புமனு தாக்கல் தொடங்கியது. விடுமுறை தினங்களை தவிர்த்து கடந்த 10 மற்றும் 13-ந்தேதி என 2 நாட்கள் மட்டும் வேட்புமனு தாக்கல் நடைபெற்றது. இந்த 2 நாட்களில். 9 பேர் வேட்புமனுவை தாக்கல்செய்தனர்.

இந்த நிலையில் இன்று (வெள்ளிக்கிழமை) வேட்புமனு தாக்கல் நிறைவுபெறுகிறது. இதையொட்டி. இன்று பகல் 11 மணி முதல் மதியம் 3 மணி வரை வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி வாய்ப்பாகும். இதனால் தி.மு.க. வேட்பாளர் வி.சி.சந்திரகுமார், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி மற்றும் சுயேச்சைகள் வேட்புமனு தாக்கல் செய்ய உள்ளனர்.

### 88 வேட்புமனுக்கள்

இதுகுறித்து தேர்தல் பிரிவு அதிகாரிகள் கூறியதாவது:

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் 2 நாட்கள் நடந்தவேட்புமனு தாக்கலில் 9 பேர் வேட்புமனு தாக்கல் செய்துள்ளனர். ஆனால் இது வரை 88 விண்ணப்பங்களை வாங்கிச்சென்றுள்ளனர். 20 மனுக்கள் பூர்த்தி செய்து, தேவையான ஆவணங்கள் இணைத்து சரிபார்ப்பு பணியை நிறைவு செய்து சென்றுள்ளனர். ஒருவர் மட்டும் ஆன்லைனில் விண்ணப்பம் செய்துள்ளார். எனினும் அவர் நேரில் வந்து மனுவை வழங்கி, உறுதிமொழி ஏற்க வேண்டும்.

இன்று வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாள் என்பதால், தேர்தல் நடத்தும் அலுவலரான மனிஷிடமும், உதவி தேர்தல் நடத்தும் அலுவலரான தியாகராஜனிடமும் வேட்புமனுவை தாக்கல்செய்யலாம். மாநகராட்சி பிரதான கட்டிடத்தின் வெளியே, 4 மேஜைகளில் அலுவலர்கள் அமர்ந்திருப்பார்கள். மனுக்களை அவர்களிடம் காண்பித்து, சரி பார்த்து, தேவையான திருத்தங்களை செய்து, தாக்கல் செய்யலாம். மேலும் மாநகராட்சி ஆணையாளர் அறைக்கு முன்பு 2 மேஜைகளில் அலுவலர்கள் இருப்பார்கள். அவர்களிடமும் சந்தேகங்களை தெரிவித்து தீர்வு பெறலாம்.

### 5-ந்தேதி வாக்குப்பதிவு

இன்று அதிக எண்ணிக்கையில் வேட்பாளர்கள் வந்தாலும், விரைவாக மனு தாக்கலுக்கு தயார் நிலையில் உள்ளோம். அதேநேரம் வேட்பாளர்களும் நேரமாக வந்து மனுவை தாக்கல் செய்து கொள்ள வேண்டும். மதியம் 3 மணி வரை மட்டுமே மனுக்கள் பெறப்படும். அதன் பின் படும். அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந்தேதி வாக்குப்பதிவும், 8-ந்தேதி வாக்கு எண்ணிக்கையும் நடக்கிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

Erode East Assembly Constituency By-election
Filing nomination ends today.
Election Officials informed 88 Applications were issued so far.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 17 JAN 2025

### தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனை:

# மாட்டு வியாபாரிகள் உள்பட 3 பேரிடம் ரூ.6¼ லட்சம் பறிமுதல்

ஈரோடு, ஜன.17-

ஈரோட்டில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையின் போது மாட்டு வியாபாரிகள் உள்பட 3 பேரிடம் ரூ.6¼ லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.

### இடைத்தேர்தல்

ஈரோடுகிழக்குதொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந்தேதி நடைபெறஉள்ளது. இதை முன்னிட்டு வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசு பொருட்கள் கொடுப்பதை தடுக்க 3 பறக்கும் படை, 3 நிலை கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு உள்ளன.

இந்த குழுவினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். அதன்படி ஈரோடு கருங்கல்பாளையம் சோதனைச்சாவடியில் நேற்று முன்தினம் நிலைகண்காணிப்பு குழு அதிகாரி தனபிரனேஷ் மற்றும் போலீசார் வாகன தணிக்கை மேற்கொண்டனர். அப்போது அந்த வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். காரில் ரூ.2 லட்சத்து 20 ஆயிரம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

### மாட்டு வியாபாரிகள்

இதைத்தொடர்ந்து காரை ஓட்டி வந்தவரிடம் போலீசார் விசாரணை நடத்தினர். விசாரணையில் அவர், கேரளா மாநிலம் கொல்லம் பகுதியை சேர்ந்த மாட்டு வியாபாரி ரபீக் என்பதும், கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தையில் மாடுகள் வாங்குவதற்காக பணம் கொண்டு வந்ததும் தெரியவந்தது. எனினும் அவரிடம் இருந்த பணத்துக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் போலீசார் அந்த பணத்தை பறிமுதல் செய்தனர்.



ஈரோட்டில் பறக்கும் படையினர் பறிமுதல் செய்த பணத்தை தேர்தல் பிரிவு அதிகாரியிடம் ஒப்படைத்த போது எடுத்தபடம்.

இதேபோல் ஈரோடு குமலன்குட்டை பகுதியில் பறக்கும்படை அதிகாரி செல்வகணபதி தலைமையிலான பறக்கும் படையினர் மேற்கொண்ட வாகன தணிக்கையில், அந்த வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். காரில் ரூ.2 லட்சம் இருந்தது. இதையடுத்து காரை ஓட்டி வந்தவரிடம் விசாரணை நடத்தியதில் அவர், கேரளா மாநிலம் மலப்புரத்தை சேர்ந்த முனீர் என்பதும், இவரும் கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தையில் மாடுகள் வாங்க பணம் எடுத்து வந்ததும் தெரியவந்தது. உரிய அவணங்கள் இல்லாததால் போலீசார் அந்த பணத்தை பறிமுதல் செய்தனர்.

### மேலாளர்

மேலும் ஈரோடு செங்கோடம்பள்ளம் பகுதியில் அதிகாரி வினோத்குமார் தலைமையிலான பறக்கும்படையினர் நேற்று தீவிர சோதனையில் ஈடுபட்டனர். அப்போது பவானி முகாசிபுதூரை சேர்ந்த கார் விற்பனை நிறுவனத்தின் மேலாளர் ஹரிபிரகாஷ் என்பவர் உரிய ஆவணங்களின்றி கொண்டு வந்த ரூ.2 லட்சத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இதைத்தொடர்ந்து மேற்கண்ட 3 பேரிடம் பறிமுதல் செய்யப்பட்ட ரூ.6 லட்சத்து 20 ஆயிரம், ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் இயங்கும் தேர்தல் பிரிவு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டன.

### ரூ.12¾ லட்சம்

ஈரோடு கிழக்கு தொகுதியில் இதுவரை மொத்தம் 9 பேரிடம் இருந்து உரிய ஆவணங்களின்றி கொண்டு வந்ததாக ரூ.12 லட்சத்து 72 ஆயிரத்து 860 பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதில் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதால் ரூ.3 லட்சத்து 30 ஆயிரத்து 860 உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மீதமுள்ள பணம் தேர்தல் நடத்தும் அலுவலரின் உத்தரவின் பேரில் அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

Flying squad checking.
Rs.6.25 Lakhs seized from three persons including cattle trader.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 17 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கு

# மேலிட பார்வையாளர்கள் வருகை



ஈரோடு, ஜன.17-

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு மேலிட தேர்தல் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி தேர்தல் பொது பார்வையாளராக ஐ.ஏ.எஸ். அதிகாரி அஜய்குமார் குப்தா, தேர்தல் காவல் பார்வையாளராக ஐ.பி.எஸ். அதிகாரி சந்தனா தீப்தி, தேர்தல் செலவின பார்வையாளராக ஐ.எப்.எஸ். அதிகாரி தினேஷ் குமார் ஜாங்கிட் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நேற்று இரவு தேர்தல் செலவின பார்வையாளர்கள் தினேஷ்குமார் ஜாங்கிட், அஜய்குமார் குப்தா, சந்தனா தீப்தி ஆகியோர் ஈரோடு வந்தனர். அவர்களுக்கு ஈரோடு மாவட்ட கலெக்டரும், மாவட்ட தேர்தல் அதிகாரியுமான ராஜகோபால் சுன்கரா பூங்கொத்து கொடுத்து வரவேற்பு அளித்தார். மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஜவகர், மாநகராட்சி ஆணையாளரும், ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரியுமான டாக்டர் மனிஷ் ஆகியோரும் வரவேற்றனர்.

எனவே பொதுமக்கள், அரசியல் கட்சியினர், பத்திரிகையாளர்கள் இடைத்தேர்தல் நடத்தை விதிமீறல்கள், ஓட்டுக்கு பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் கொடுப்பது தொடர்பான புகார்களை, தேர்தல் பொது பார்வையாளர்- 99445 85473, தேர்தல் காவல் பார்வையாளர்- 99445 86039, தேர்தல் செலவின பார்வையாளர்-96009 68261 என்ற எண்களில் தெரிவிக்கலாம்.

இந்த தகவல் ஈரோடு மாவட்ட கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

Observers arrived in for Erode East Assembly Constituency By-election,

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 17 JAN 2025

# ஈரோடு மாநகராட்சி அலுவலகத்துக்கு பலத்த போலீஸ் பாதுகாப்பு

ஈரோடு, ஜன.17-
ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று (வெள்ளிக்கிழமை) நிறைவு பெறுகிறது. தி.மு.க., நாம் தமிழர் கட்சி உள்பட சுயேச்சை வேட்பாளர்கள் பலர் வேட்பு மனு தாக்கல் செய்ய உள்ளனர். இதனால் ஈரோடு மாநகராட்சி அலுவலக வளாகம் பரபரப்பாக காணப்படும். இதையொட்டி பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் ஒருவேட்பாளர் மனு தாக்கல் செய்துவிட்டு வரும் வரை மற்றொரு வேட்பாளர் காத்திருக்க வேண்டும் என்று அதிகார்ரிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

Tight Police security for the Erode Corporation Office.

Scanned with OKEN Scanner

**தினத்தந்தி** 17 JAN 2025

### ஈரோடு கிழக்கு தொகுதியில்

# இடைத்தேர்தலை முன்னிட்டு 253 பேர் துப்பாக்கிகளை ஒப்படைத்தனர்

ஈரோடு, ஜன.17-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி 253 பேர் துப்பாக்கிகளை ஒப்படைத்துள்ளனர்.

## 253 துப்பாக்கிகள் ஒப்படைப்பு

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந் தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு ஈரோடு கிழக்கு தொகுதியில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்துள்ளன. எனவே தொகுதி முழுவதும் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஏற்கனவே பண பட்டுவாடா, பரிசுப்பொருட்கள் வழங்குவதை தடுக்கும் வகையில் பலத்த கண்காணிப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதுபோல், ஈரோடு கிழக்கு தொகுதியில் உரிமம் பெற்ற துப்பாக்கிகள் வைத்திருப்பவர்கள் துப்பாக்கிகளை ஒப்படைக்க ஈரோடு மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா உத்தரவிட்டு இருந்தார்.

அதன்பேரில், இதுவரை 253 பேர் தங்களிடம் இருந்த துப்பாக்கிகளை ஒப்படைத்து உள்ளனர்.. இதில் ஒற்றைக்குழல் துப்பாக்கி,, இரட்டைக்குழல் துப்பாக்கி, கைத்துப்பாக்கிகள் உள்ளன.

## பறிமுதல் செய்ய நடவடிக்கை

இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது:-

ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 286 பேர் பாதுகாப்பு கருதி துப்பாக்கி உரிமம் பெற்றுள்ளனர். இதில் கருவூல பாதுகாப்பு, வங்கி பாதுகாப்பு உள்ளிட்ட அத்தியாவசிய பாதுகாப்பு பணிகளுக்காக 13 துப்பாக்கிகளை உரிமம் பெற்றவர்களே வைத்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. 253 துப்பாக்கிகளை உரிமையாளர்கள் ஒப்படைத்துள்ளனர். அவை பாதுகாப்பு மையத்தில் உள்ளன. 20 துப்பாக்கிகள் இன்னும் ஒப்படைக்கப்படவில்லை. அவற்றை பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் முடிவுக்கு வந்த உடன் உரிமம் பெற்றவர்களிடம் அவரவர் துப்பாக்கிகள் மீண்டும் வழங்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

Due to Erode East Assembly Constituency By-election 253 persons handed over their guns.

Scanned with OKEN Scanner

தினமலர்

17 JAN 2025

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்: தேர்தல் பார்வையாளர்கள் ஈரோடு வருகை


ஈரோடு, ஜன.17-

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல் வருகிற பிப்ரவரி 5ம் தேதி நடைபெறுகிறது.

தேர்தல் பணிகள் சுமூகமாகவும், நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், இந்திய தேர்தல் கமிஷனால் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பொதுப்பார்வையாளர், தேர்தல் காவல் பார்வையாளர் மற்றும் தேர்தல் செலவின பார்வையாளர்கள் நியமனம்; செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தேர்தல் பொதுப் பார்வையாளராக அஜய் குமார் குப்தா ( 9944585473), தேர்தல் காவல் பார்வையாளராக சந்தனா தீப்தி ( 9944586039), தேர்தல் செலவின பார்வையாளராக தினேஷ் குமார் ஜாங்கிட் (9600968261) ஆகியோர் நியமனம் செய்யப்பட்டு ஈரோடு வந்துள்ளனர்.

எனவே, பொது மக்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள், தேர்தல் நடத்தை விதிகள் மீறல், வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் அளித்தல் உள்ளிட்ட தேர்தல் தொடர்பான புகார்கள் ஏதும் இருப்பின், தேர்தல் பொதுப் பார்வையாளர், தேர்தல் காவல் பார்வையாளர் மற்றும் தேர்தல் செலவின பார்வையாளர் ஆகியோருக்கு போன் மூலம் தெரிவிக்கலாம் என ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா தெரிவித்துள்ளார்.



ஈரோடு மாவட்ட தேர்தல் செலவின பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள தினேஷ் குமார் ஜாங்கிட்டை மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா மலர் கொத்து வழங்கி வரவேற்றார். அருகில் எஸ்பி ஜவகர், மாநகராட்சி கமிஷனர் மனிஷ் உள்ளனர்.

Erode East Assembly Constituency By-election
Election Observers arrived in Erode.

Scanned with OKEN Scanner

தினமலர் 17 JAN 2025

# ஈரோட்டில் ரூ.6.20 லட்சம் பறிமுதல் பறக்கும் படையினர் நடவடிக்கை

ஈரோடு, ஜன. 17-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் நடைபெறுவதையொட்டி ரூ.50 ஆயிரத்திற்கு மேல் உரிய ஆவணங்களின்றி கொண்டு வரும் பணம் மற்றும் பரிசு பொருட்களை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

ஈரோடு கருங்கல்பாளையம் சோதனை சாவடி அருகே தேர்தல் பறக்கும் படையினர் நேற்று அதிகாலை வாகன சோதனை நடத்தியபோது அந்த வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி சோதனை செய்தபோது காரை ஓட்டி வந்தவரிடம் ரூ.2 லட்சம் இருந்தது.

விசாரணையில் அவர் கேரள மாநிலத்தை சேர்ந்த மாட்டு வியாபாரி ரபீக் என்பதும், கருங்கல்பாளையம் மாட்டு சந்தைக்கு மாடுகள் வாங்க பணத்தை எடுத்து வந்ததாக கூறினார். ஆனால் அந்த பணத்திற்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் தேர்தல் பறக்கும் படையினர் ரூ.2 லட்சத்தையும் பறிமுதல் செய்து, ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் கட்டுப்பாட்டு அலுவலரிடம் ஒப்படைத்தனர்.

இதேபோல், ஈரோடு குமலன்குட்டை பகுதியில் பறக்கும் படையினர் அந்த வழியாக வந்த காரை சோதனை செய்த போது, காரில் ரூ.2.20 லட்சம் ரொக்கம் இருந்தது. விசாரணையில் அவர் கேரளாவை சேர்ந்த முனீர் என்பதும், கருங்கல்பாளையம் மாட்டு சந்தைக்கு மாடு வாங்க பணத்தை எடுத்து வந்ததும் தெரியவந்தது. ஆனால் உரிய ஆவணங்கள் இல்லாததால் தேர்தல் பறக்கும் படையினர் பணத்தை பறிமுதல் செய்து, தேர்தல் பிரிவு கட்டுப்பாட்டு அலுவலரிடம் ஒப்படைத்தனர்.



ஈரோடு குமலன்குட்டை பகுதியில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு வரப்பட்ட ரூ.2 லட்சத்தை பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்து மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள தேர்தல் கட்டுப்பாட்டு மையத்தில் ஒப்படைத்தனர்.

மேலும், செங்கோடம்பாளையம் பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த காரை நிறுத்தி சோதனை செய்த போது காரில் ரூ.2 லட்சம் பணம் இருந்தது தெரிய வந்தது.

காரில் இருந்த நபரிடம் விசாரணை நடத்தியதில் அவர் குமலன் குட்டை பகுதியைச் சேர்ந்த ஹரி பிரகாஷ் என்பதும் தனியார் கார் ஷோரூமின் மேலாளராக இருப்பதும் தெரிய வந்தது. அவரிடம் பணத்திற்குரிய ஆவணம் இல்லாததால் ரூ.2 லட்சத்தை பறக்கும் படையினர் பறிமுதல் செய்து ஈரோடு மாநகராட்சி தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் ஒப்படைத்தனர்.

ஒரே நாளில் 2 வியாபாரிகள், மேலாளரிடம் என பறக்கும் படையினர் ரூ.6.20 லட்சத்தை பறிமுதல் செய்துள்ளனர். மொத்தமாக நேற்று வரை ரூ.12 லட்சத்து 72 ஆயிரத்து 860 ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதில் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதால் ரூ. 3 லட்சத்து 30 ஆயிரத்து 860 ரொக்கம் உரியவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

Rs.6.20 Lakhs seized by the flying squad in Erode.

Scanned with OKEN Scanner

**தினகரன்** 17 JAN 2025


### ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# 9 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை; கண்காணிப்பு பணிகள் தீவிரம்

ஈரோடு, ஜன.17: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5ம் தேதி நடைபெற உள்ளது. இந்த தொகுதியில் 1 லட்சத்து 9 ஆயிரத்து 636 ஆண் வாக்காளர்களும், 1 லட்சத்து 16 ஆயிரத்து 760 பெண் வாக்காளர்களும், மூன்றாம் பாலினத்தவர்கள் 37 பேரும் என மொத்தம் 2 லட்சத்து 26 ஆயிரத்து 433 பேர் வாக்காளர்களாக உள்ளனர். இதில், வாக்காளர்கள் வாக்களிக்க வசதியாக 53 இடங்களில் 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வாக்குச்சாவடி மையங்களில் மின்சாரம், அடிப்படை வசதி, மாற்றுத்திறனாளிகள் மற்றும் மக்கள் கூட்ட நெரிசலின்றி வாக்களிக்க தேவையான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு, தயார் படுத்தும் பணிகள் தீவிரமாக நடந்தது வருகிறது. இந்நிலையில், கிழக்கு தொகுதி முழுவதும் அமைக்கப்பட்ட 237 வாக்குச் சாவடிகளில், 4 இடங்களில் உள்ள 9 வாக்குச்சாவடிகள் பதற்றமானவையாக அறிவிக்கப்பட்டு, அங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள போலீசாருக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதன்பேரில், பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து தேர்தல் பிரிவு போலீஸ் அதிகாரிகள் கூறியதாவது:



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்காக 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. அதில், மக்கள் தொகை அதிகம் உள்ள பி.பெ.அக்ரஹாரம், ராஜாஜிபுரம், வளையக்கார வீதி, மகாஜன பள்ளி பகுதி ஆகிய 4 இடங்களில் 9 வாக்குச்சாவடிகள் பதற்றமானவையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு சிசிடிவி கேமரா மூலம் கண்காணிப்பு செய்யப்படும். கூடுதல் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு, அமைதியாக தேர்தல் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர்கள் கூறினார்.

Erode East Assembly Constituency By-election
9 Polling booths were identified as vulnerable.
Surveillance intensified.

Scanned with OKEN Scanner

தினகரன் 17 JAN 2025

### கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

## வாக்குச்சாவடிகளில் அடிப்படை வசதி சீரமைப்பு பணிகள் தீவிரம்

ஈரோடு, ஜன. 17: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வாக்காளர்கள் வாக்களிக்க வசதியாக 53 இடங்களில் 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. தேர்தல் பிரிவு அதிகாரிகள் கூறியதாவது: மொத்தமுள்ள 237 வாக்குச் சாவடிகளில், 34 தனியார் பள்ளிகளில் அமைந்துள்ளது.

இவை தவிர, ஒன்று முதன்மை கல்வி அலுவலர் அலுவலகத்திலும், ஈரோடு வஉசி பூங்கா விளையாட்டு அலுவலகத்திலும், வீரப்பன் சத்திரத்தில் உள்ள மாநகராட்சி அலுவலகத்திலும் தலா ஒரு வாக்குச்சாவடி அமைந்துள்ளது. மீதமுள்ள 200 ஓட்டுசாவடிகளும் அரசுப் பள்களில் அமைந்துள்ளது. இவற்றில் குடிநீர், மின்சாரம், கழிவறை, ரேம்ப் வசதி உள்ளிட்டவை குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இதில் குறைபாடுகள் கண்டறியப்பட்ட வாக்குச்சாவடிகளில் அவற்றை சீரமைப்பது, பராமரிப்பு பணியை மேற்கொள்வது போன்ற பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. ஓரிரு நாட்களில் இப்பணி முடிந்து விடும். அதன் பின் வாக்குச்சாவடிகள், வாக்குப்பதிவுக்கு தயாராகி விடும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

Erode East Assembly Constituency By-election Basic Infrastructure in the Polling booths are being renovated.

Scanned with OKEN Scanner

தினகரன் 17 JAN 2025

### ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# பறக்கும் படையினர் சோதனையில் இதுவரை ரூ.12.72 லட்சம் பறிமுதல்

ஈரோடு, ஜன. 17: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி, வாக்காளர்களுக்கு வேட்பாளர்கள் பணம் மற்றும் பரிசு பொருட்கள் எடுத்து செல்வதை தடுக்க 3 பறக்கும் படை, 3 நிலை கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு தீவிர சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஈரோடு கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட கருங்கல்பாளையம் சோதனைச்சாவடியில் நேற்று முன்தினம் தனபிரனேஷ் தலைமையில் நிலைக்கண்காணிப்பு குழுவினர் மேற்கொண்ட வாகன தணிக்கையில், அவ்வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர்.

அப்போது, காரில் ரூ.2 லட்சத்து 20 ஆயிரம் ரொக்கம் இருந்தது. காரை ஓட்டி வந்த நபரிடம் விசாரணை நடத்தியதில், அவர் கேரளா மாநிலம் கொல்லம் பகுதியை சேர்ந்த மாட்டு வியாபாரி ரபீக் என்பதும், கருங்கல்பாளையம் மாட்டு சந்தைக்கு மாடுகளை வாங்க பணம் கொண்டு வந்ததும் தெரியவந்தது. இருப்பினும் அவரிடம் இருந்த பணத்திற்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் பணத்தை பறிமுதல் செய்து, மாநகராட்சி அலுவலகத்தில் இயங்கும் தேர்தல் பிரிவு கட்டுப்பாட்டு அலுவலரிடம் ஒப்படைத்தனர்.

ஈரோடு குமலன் குட்டை பகுதியில் செல்வ கணபதி தலைமையிலான பறக்கும் படையினர் மேற்கொண்ட வாகன தணிக்கையில், அவ்வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். இதில், காரில் வந்தவரிடம் ரூ.2 லட்சம் ரொக்கம் இருந்தது. இதையடுத்து காரை ஓட்டி வந்த நபரிடம் விசாரணை நடத்தியதில், அவர், கேரளா மாநிலம் மலப்புரத்தை சேர்ந்த முனீர் என்பதும், மாட்டுச்சந்தைக்கு மாடு வாங்க பணத்தை எடுத்து வந்ததும் தெரிய வந்தது. உரிய ஆவணங்கள் இல்லாததால் பணத்தை பறிமுதல் செய்து பறக்கும் படையினர் தேர்தல் கட்டுப்பாட்டு பிரிவு அலுவலரிடம் ஒப்படைத்தனர்.

ஈரோடு செங்கோடம்பள்ளம் பகுதியில் வினோத்குமார் தலைமையில் பறக்கும் படையினர் நேற்று மேற்கொண்ட சோதனையில், பவானி முகாசிபுதூரை சேர்ந்த கார் விற்பனை நிறுவனத்தின் மேலாளர் உரிய ஆவணங்களின்றி கொண்டு வந்த ரூ.2 லட்சத்தை பறிமுதல் செய்து, தேர்தல் கட்டுப்பாட்டு பிரிவு அலுவலகத்தல் ஒப்படைத்தனர். ஈரோடு கிழக்கு தொகுதியில் இதுவரை மொத்தம் 9 பேரிடம் இருந்து உரிய ஆவணங்களின்றி கொண்டு வந்ததாக ரூ.12 லட்சத்து 72 ஆயிரத்து 860 பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதில் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதால் ரூ.3 லட்சத்து 30 ஆயிரத்து 860 ரொக்கம் சம்மந்தப்பட்டவர்களின் விடுவிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணம் கருவூலத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரின் உத்தரவின்பேரில் அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

Erode East Assembly Constituency By-election
So far 12.72 Lakhs seized by the flying squad.

Scanned with OKEN Scanner

தினமணி 17 JAN 2025

# ஈரோடு இடைத்தேர்தல் பாதுகாப்புப் பணி: 160 போலீஸார் வருகை

ஈரோடு, ஜன. 16: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பாதுகாப்புப் பணிக்கு சிறப்பு காவல் படையைச் சேர்ந்த 160 போலீஸார் ஈரோடு வந்துள்ளனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வருகிற பிப்ரவரி 5- ஆம் தேதி நடைபெற உள்ளது. இதற்காக தொகுதியில் 53 இடங்களில் 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. தேர்தல் பாதுகாப்பு பணிக்காக 5 கம்பெனி துணை ராணுவ வீரர்கள் கோரி மாவட்ட தேர்தல் அலுவலர் மூலம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கோவை மாவட்டம், கோவைப்புதூரில் உள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் படை 4-ஆம் அணி (பட்டாலியன்) போலீஸார் 160 பேர் இரண்டு குழுவாக தனி வாகனத்தில் புதன்கிழமை ஈரோடு வந்தடைந்தனர்.

ஈரோடு தேர்தல் பிரிவு அதிகாரிகள் வரவேற்று, ஈரோடு குமலன் குட்டை, சூரம்பட்டிவலசு பகுதிகளில் உள்ள சமுதாய கூடத்தில் அவர்களைத் தங்கவைத்துள்ளனர்.

இவர்கள் தேர்தல் நிறைவு பெறும் வரை பாதுகாப்புப் பணியை தொடர்வர். இது தவிர துணை ராணுவ வீரர்களும் ஓரிரு நாளில் ஈரோடு மாவட்டத்துக்கு வருகை தர உள்ளதாக போலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

Erode East Assembly Constituency By-election
160 Police arrived for election security duty.

Scanned with OKEN Scanner

தினமணி 17 JAN 2025

# ஈரோடு இடைத்தேர்தல்: 3 பேரிடம் ரூ.6.20 லட்சம் பறிமுதல்

ஈரோடு, ஜன.16: உரிய ஆவணம் இல்லாமல் பணம் எடுத்துச்சென்ற 3 பேரிடம் ரூ.6.20 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5- ஆம் தேதி நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு வாக்காளர்களுக்கு வேட்பாளர்கள் பணம் மற்றும் பரிசுப் பொருள்கள் எடுத்து செல்வதை தடுக்க 3 பறக்கும் படை, 3 நிலைக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழுவினர் தீவிர வாகனச் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். அதன்படி ஈரோடு கருங்கல்பாளையம் சோதனைச்சாவடியில் புதன்கிழமை மாலை நிலைக் கண்காணிப்பு குழுவினர் வாகனத் தணிக்கை மேற்கொண்டனர்.

அப்போது அந்த வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். காரில் ரூ.2 லட்சத்து 20 ஆயிரம் இருந்தது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து காரை ஓட்டி வந்தவரிடம் போலீஸார் விசாரணை நடத்தியதில் அவர், கேரள மாநிலம், கொல்லம் பகுதியைச் சேர்ந்த மாட்டு வியாபாரி ரபீக் என்பதும், கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தையில் மாடுகள் வாங்குவதற்காக பணம் கொண்டு வந்ததும் தெரியவந்தது. எனினும் அவரிடம் இருந்த பணத்துக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் போலீஸார் அந்தப் பணத்தைப் பறிமுதல் செய்தனர்.

இதேபோல, ஈரோடு குமலன்குட்டை பகுதியில் பறக்கும் படையினர் நடத்திய வாகனத் தணிக்கையில், உரிய ஆவணங்களின்றி காரில் எடுத்துவரப்பட்ட ரூ.2 லட்சத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். விசாரணையில் காரில் வந்தவர், கேரள மாநிலம் மலப்புரத்தை சேர்ந்த முனீர் என்பதும் இவரும் கருங்கல்பாளையம் மாட்டுச்சந்தையில் மாடுகள் வாங்க பணம் எடுத்து வந்ததும் தெரிய வந்தது.

மேலும், ஈரோடு செங்கோடம்பள்ளம் பகுதியில் வினோத்குமார் தலைமையிலான பறக்கும்படையினர் வியாழக்கிழமை காலை தீவிர சோதனையில் ஈடுபட்டனர். அப்போது பவானி முகாசி புதூரைச் சேர்ந்த கார் விற்பனை நிறுவனத்தின் மேலாளர் ஹரிபிரகாஷ் உரிய ஆவணங்களின்றி கொண்டு வந்த ரூ.2 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.

3 பேரிடம் பறிமுதல் செய்யப்பட்ட ரூ.6 லட்சத்து 20 ஆயிரம், ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் இயங்கும் தேர்தல் பிரிவு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. ஈரோடு கிழக்கு தொகுதியில் இதுவரை மொத்தம் 9 பேரிடம் இருந்து உரிய ஆவணங்களின்றி கொண்டு வந்ததாக ரூ.12 லட்சத்து 72 ஆயிரத்து 860 பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதில் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதால் ரூ.5 லட்சத்து 52 ஆயிரம் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மீதமுள்ள

ரூ.7 லட்சத்து 20,800 தேர்தல் நடத்தும் அலுவலரின் உத்தரவின்பேரில் அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

Erode East Assembly Constituency By-election
Rs.6.20 Lakhs seized from three persons.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 17 JAN 2025

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் இன்றுடன் வேட்பு மனுத்தாக்கல் நிறைவு

**ஈரோடு, ஜன. 17**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் மனுத்தாக்கல், இன்று மதியத்துடன் நிறைவு பெறுகிறது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், கடந்த 10ம் தேதி வேட்பு மனுத்தாக்கல் துவங்கியது. தொடர் விடுமுறையால், 10, 13ல் மனுத்தாக்கல் நடந்தது. இதில் சுயேட்சைகளாக, 9 பேர், 10 வேட்பு மனுவை தாக்கல் செய்தனர். இந்நிலையில் இன்று மதியத்துடன் மனுத்தாக்கல் நிறைவு பெறுகிறது. மதியம், 3:00 மணியுடன் மனுத்தாக்கல் முடிகிறது. தி.மு.க., மற்றும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் மனுத்தாக்கல் செய்ய உள்ளனர்.

இதுபற்றி தேர்தல் பிரிவு அதிகாரிகள் கூறியதாவது:

இதுவரை, 88 வேட்பு மனு படிவங்களை பெற்று சென்றதில், ஒன்பது வேட்பாளர்கள் சார்பில், 10 மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இன்று அதிக எண்ணிக்கையில் வேட்பாளர்கள் வந்தாலும், விரைவான மனுத்தாக்கலுக்கு தயார் நிலையில் உள்ளோம். மதியம், 2:30 மணிக்கு அறிவிப்பு செய்வோம். 3:00 மணி வரை மட்டுமே மனுக்கள் பெறப்படும். மாநகராட்சி ஆணையர் அறை உள்ள வளாகத்துக்குள் வந்து, மனு தாக்கலுக்கு வந்த விபரத்தை தெரிவித்து, டோக்கன் பெற்று கொள்ள வேண்டும். அவர்களது மனு மட்டுமே ஏற்கப்படும். நாளை வேட்பு மனு பரிசீலனை நடக்கும். 20ல் மனு வாபஸ் பெறுதலும், இறுதி வேட்பாளர் பட்டியல், சின்னத்துடன் அறிவிப்பு செய்யப்படும். இவ்வாறு கூறினர்.

**கடந்த முறை 121 மனுத்தாக்கல்**

கடந்த, 2023 பிப்.,ல் நடந்த கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், காங்., அ.தி.மு.க., தே.மு.தி.க., நாம் தமிழர் கட்சி என, 96 வேட்பாளர்கள், 121 மனு தாக்கல் செய்தனர். இதில், 38 மனுக்கள் தள்ளுபடியாகி, 83 மனுக்கள் ஏற்கப்பட்டன. ஆறு மனு வாபஸ் பெறப்பட்டு, 77 பேர் களத்தில் இருந்தனர்.

Erode East Assembly Constituency By-election
Filing nomination ends today.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 17 JAN 2025

# தேர்தல் பார்வையாளர் இன்று வருகை

**ஈரோடு, ஜன. 17–**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் இன்று வேட்பு மனுத்தாக்கல் நிறைவடையும் நிலையில், தேர்தல் பார்வை யாளர்கள் இன்று ஈரோட்டுக்கு வருகின்றனர்.

தேர்தல் பொது பார்வையாளராக ஐ.ஏ.எஸ்., அதிகாரி அஜய் குமார் குப்தா, கணக்கு பார்வை யாளராக ஐ.ஆர்.எஸ்., அதிகாரி தினேஷ்குமார் ஜாங்கிட், காவல் பார்வையாளராக ஐ.பி.எஸ்., அதிகாரி சந்தனா தீப்தி நியமிக்கப்பட்டுள்ளனர். ஈரோடு காளிங்கராயன் இல்லத்தில் தங்கி, தேர்தல் பணிகளை துவங்குகின்றனர்.

Election Observers arrives today.

Scanned with OKEN Scanner